யினர் கட்டிடத்தைக் கட்டிக் கொண்டிருக்கிறபோது—அதற்குரிய மதிப்பு வந்துவிட்டால் பணத்தைக் கொடுத்து விடலாம் என்ற ஒரு எண்ணத்திலே அவர்கள் கட்டிடத்தைக் கட்டத் தொடங்கினார்கள்—அறநிலையத் துறையினுடைய தாமதமான நடவடிக்கையினால், எங்களுக்கு இந்த விலையை நிர்ணயித்த பிறகுதான் நீங்கள் கட்டிடத்தைக் கட்டவேண்டும் என்று சொல்லி, நிறுத்தி இருக்கிறார்கள். ஆகவே நிர்ணயித்த அந்த விலையைத் தருவதற்கு மருத்துவத் துறை தயாராக இருக்கிறது. எனவே, விரைவிலேயே அறநிலையத்துறை நடவடிக்கை எடுத்து, மருத்துவத் துறையிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டு, இந்தத் திட்டத்திற்கு விலக்கு அளித்து, மக்களுக்கு மருத்துவ வசதியைச் செய்து தருவதற்கு அமைச்சர் அவர்கள் உறுதுணையாக இருப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு வேண்டுமானால் அறநிலையத் துறையைப் பற்றிக் கவலை இல்லாமல் இருக்கலாம். ஆனால் அரசு அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டியதாக இருக்கிறது. கோவிலுக்குச் சொந்தமான இடத்தைச் சட்டப்படி எடுக்காமல், இரண்டு துறையினரும் ஒப்புதல் செய்து கொண்டாலும் கூட, இந்து சமய அறநிலையத் துறை சட்டம் 34 பிரகாரம், குறிப்பிட்ட படிவத்தில் விண்ணப்பம் எழுதி இசைவைப் பெற்றுதான் செய்ய வேண்டும். இந்த இசைவைப் பெறும்படியாக கேட்டிருக்கிறோம். அறநிலையத் துறையால் எந்தத் தாமதமும் இல்லை.

(எ) நத்தம் கோயில்பட்டி கைலாசநாதர் கோயில் திருப்பணி.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நத்தம் கோவில்பட்டியிலிருக்கும் பாண்டிய மன்னர் காலத்தில் கட்டப்பட்ட, பிரசித்தி பெற்ற அருள்மிகு கைலாசநாதர் கோவில் தற்சமயம் மிகவும் பழுதடைந்த நிலையில்

1987 மே 4] [திரு. மெ. ஆண்டி அம்பலம்]

இருப்பது குறித்த". அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

மதுரை மாவட்டம், நத்தம் வட்டம், நத்தம் கோயில்பட்டி, அருள்மிகு கைலாசநாதர் சுவாமி திருக்கோயில் திருப்பணி செய்வது குறித்து மதுரை துணை ஆணையரிடம் அறிக்கை கோரப்பட்டது. துணை ஆணையர் மேற்கண்ட ஆலய திருப்பணி செய்தல் குறித்து திருப்பணிக்குழு அமைத்து அறிக்கை அனுப்ப மேற்கண்ட ஆலய செயல் அலுவலரைக் கோரியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

2. இக்கோயிலுக்குத் திருப்பணிக்குழு அமைத்து விரைவில் திருப்பணி வேலைகள் துவங்க தக்க எற்பாடுகள் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பணிக்குழு 1981 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டு, அதற்கான ஆணையும் இந்தத் துறையில் பிறப்பிக்கப்பட்டது, ஆனால் இந்தத் தகவலைக்கூட இந்தத் துறையின் அதிகாரிகள் கவனத்தில் கொள்ளாமல், இந்த அறிக்கையைத் தயார் செய்து தந்துள்ளார்கள் என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை துணை ஆணையரிடமிருந்து அறிக்கை கோரப்பட்டிருக்கிறது. அவர், சம்பந்தப்பட்ட ஆலயத்தினுடைய செயல் அலுவலரிடமிருந்து வாங்கித் தரவேண்டும். அதுவும் விவர அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. சம்பந்தப்பட்ட கோயில் செயல் அலுவலர் அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும். திருப்பணிக் குழு நியமிக்கப்பட்டு இருக்கிறது. அதனுடைய மதிப்பீடு இவ்வளவு, இவ்வளவு வசூல் செய்தார்கள், இவ்வளவு நிதி எதிர்பார்க்கிறார்கள் என்ற விவரத்தைக் கோரிதான், நாம் துணை ஆணையரிடமிருந்து அறிக்கையை எதிர்பார்க்கிறோம்.

திரு. மெ. ஆண்டி அம்பலம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திருப்பணிக் குழு செயல்பாட்டில் உள்ளதா? மேலும் 1972-ஆம் ஆண்டிலிருந்து எம்.எல்.ஏ.வாக இருந்து வரும் நானும், 1980 ஆம் ஆண்டில் இருந்து தொடர்ந்து எம்.பி. யாக இருந்து வரும் சேனாதிபதி கவுண்டரும் இந்தக் குழுவிலே சேர்க்கப்படாமல் புறக்கணிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். எனவே, எங்களையும் இணைத்து இந்தக் குழுவைத் திருத்தி அமைக்க அரசு முன்வருமா? இந்தக் கோவிலுக்கு உள்ள சொத்தின் மதிப்பு எவ்வளவு? இந்தக் கோவிலுக்கு வருமானம் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்: தலைவர் அவர்களே, இதுபற்றித் தனியாக வினா போடும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களையும் மற்றவர்களையும் சேர்ப்பது பற்றி துறை ஆராய்வதற்கு நடவடிக்கை எடுக்கச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கவன ஈர்ப்பு எண் 8, 9 மற்றும் 10 ஆகியவை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பட்டு, பிறிதொரு நாளில் எடுத்துக்கொள்ளப்பெறும்.

3.அறிக்கை அளித்தல்.

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு.

திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் மூன்றாவது அறிக்கையை இந்த மாமன்றத்திற்குப் பெருமையுடன் அளிக்கிறேன்.